உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.583/2023

| | |
|---|---|
| பெயர் | : நதியா |
| தகப்பனார் பெயர் | : |
| கணவர் பெயர் | :முனிஸ்வரன் |
| வயது | :34 |
| கிராமம் | : கோட்டநத்தம்பட்டி |
| வட்டம் | :மதுரை |
| தொழில் | : கூலிவேலை |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

05.08.2024

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என் அப்பாவுடைய தம்பி மற்றும் அவரது மனைவி. ஆஜர் எதிரிகள் மீது நான் வழக்கு கொடுத்துள்ளேன். எங்கள் நிலத்தில் உள்ள கல்லுகால்களை நீக்கி விற்பனை செய்துவிட்டார்கள். அதை என் தாயார் 19.12.2021 அன்று என் தாயார் போன் செய்து நடந்த விபரத்தை தெரிவித்தார். அன்றைய தினம் மாலை என் சித்தப்பா ஆஜர் எதிரி அருணாச்சலத்திற்கு போன் செய்தேன். என் சித்தப்பா போனிலே என்னை ஆபாசாமான வார்த்தைகளை கொண்டு திட்டினார். என்னை தேவிடியா என்று திட்டி அப்படித்தான் நான் விற்பேன் என்று திட்டினார். 20.12.2021 அன்று மதியம் 12.00 மணிக்கு மேல் என் அம்மாவை அழைத்துக்கொண்டு சித்தப்பா வீட்டிற்கு பூதமங்களத்திற்கு சென்றேன். நான் வெளியே நின்று பேசினேன். அப்போது என் சித்தி நாக்கை  துறுத்தி வீட்டிற்குள்ளே வரும்படி அழைத்தார். நான் வீட்டிற்கு வெளியே நின்று நானும், என் அம்மா அமிர்தமும்பேசிக்கொண்டிருந்தோம்.  வீட்டிற்குள்ளே இருந்த ஆஜர் எதிரி அருணாச்சலம் அசிங்கமாக வார்த்தையால்

என்னை திட்டிக்கொண்டே இருந்தார். அப்போதும் அதே தேவிடியா என்று திட்டினார். நாங்கள் ஆண்களுடன் வரவில்லை என்பதால் நானும், எனதுஅ ம்மாவும் வீட்டிற்கு திரும்ப நினைத்தோம். அப்போது ஆஜர் எதிரி அருணாச்சலம் நாங்கள் செல்கிறோம் என்று ஆஜர் எதிரி பூமாதேவியிடம் சொல்லவே என் சித்தி ஆஜர் எதிரி பூமாதேவி அடுப்பில் காய வைத்த எண்ணெயை எடுத்து என் முதுகில் ஊற்றிவிட்டார்கள். எனக்கு முதுகில் இருந்து முன்பக்கம் பின்னால் முழுவதுமாக கொடுங்காயம் ஏற்பட்டது. சாட்சி அடையாளமாக தலும்புகளை காட்டுகிறார். 108 ல் மேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து செல்லப்பட்டேன். நான் மிகவும் கவலைக்கிடமாக இருந்ததால் அங்கிருந்து தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டேன். அதன்பிறகு கீழவளவு காவல்நிலையத்தார் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது என்னை வந்து விசாரணை செய்தார்கள். நான் அவர்களிடம் புகார் வாக்குமூலம்அளித்தேன். சாட்சியிடம் புகார் வாக்குமூலம் காட்டப்பட்டு சாட்சி அதை ஒப்புக்கொள்கிறார் அதில் உள்ள கையெழுத்து தன்னுடைய என்று ஒப்புக்கொள்ளவே அது அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவலர்களிடம் நடந்ததை கூறினேன். அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை :

கோட்டநத்தாம்பட்டியில் எனக்கு வீடு இருக்கிறது என்றால் சரிதான். நான் அரசு மருத்துவமனையில் இருந்த போது சுயநினைவுடன் தான் இருந்தேன். எனக்கு சுயநினைவு இருந்தது. நான் பி.காம் படித்துள்ளேன். நான் சுயநினைவுடன் இருந்ததால் மருத்துவரிடம் சம்பவத்தை பற்றி எந்த இடத்தில், எந்த ஊரில், எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்பதை

தெளிவாக கூறினேன் என்றால் சரிதான். புகாரை நான் எழுதவில்லை. என்னால் எழுத முடியவில்லை. புகாரை என் கொழுந்தனார் சதிஸ்குமார் எழுத நான் கையெழுத்து போட்டேன். புகார் எழுதும் போது நடந்த விபரத்தை அப்படியே கூறிவிட்டேன். கீழவளவு காவலர்கள் எத்தனை மணிக்கு என்னை விசாரணை செய்தார்கள் என்று நினைவில்லை. ஆனால் அரசு மருத்துவமனை, மேலூரில் சிகிச்சையில் இருந்த போது வந்தார்கள். எவ்வளவு நேரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்று தெரியவில்லை. எண்ணெய் என் மீது ஊற்றப்பட்டதால் சம்பவ இடத்திலேயே என் துணிமணிகளை அப்புறப்படுத்திவிட்டார்கள். என்னுடைய புகாரிலோ, போலிஸ் விசாரணையிலோ சம்பவத்தை நேரடியாக பார்த்தவர்களை பற்றியோ, விலக்கிவிட்டவர்களை பற்றியோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சம்பவ இடத்தில் யாருமே அருகில் இல்லை. காவலர்கள் எவ்வளவு நேரம் விசாரணை செய்தார்கள் என்று எனக்கு நினைவில்லை. என்னால் வலி தாங்க முடியவில்லை என்பதால் மதுரை, கென்னட் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டேன். அப்போது நான் சுயநினைவுடன் தான் இருந்தேன். கென்னட் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது மருத்துவர்கள் விசாரித்தார்களா என்று நினைவில்லை. நான் வேண்டுமென்றே தற்போது நினைவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. 3 ஆண்டுகள் ஆகிவிட்டதால் தற்போது நினைவில்லை. இந்த வழக்கில் அடுத்த பட்டியலிட்ட அரசு தரப்பு சாட்சி என்னுடைய தாயார் அமிர்தம். 3 வது பட்டியல் சாட்சி சதிஸ்கோபி என்னுடைய உறவினர் அல்ல. சேவுக பெருமாள் என்பவர் அந்த ஊர்க்காரர். எங்களுக்கு உறவினர் அல்ல. பாலமுருகன் எனக்கு வேண்டப்பட்டவர் அல்ல. சதீஸ் குமார், பஞ்சவர்ணம் ஆகியோர் எனது

கொழுந்தனர் மற்றும் மாமியார் ஆவார்கள். ஆஜர் எதிரிகளுக்கும், எனக்கும் இடம் தொடர்பாக பிரச்சினை இருந்து வருகிறது என்றால் சரிதான். கென்னட் மருத்துவமனையில்நான் சிகிக்சையில் இருந்த போது காவலர்கள் ஒரு நான் என்னை வந்து விசாரணை செய்தார்கள். நான் ஐசியுவில் இருந்ததால் எத்தனை நாள்கள் கழித்து வந்தார்கள் என்று எனக்கு நினைவில்லை. ஐசியுவில் இருந்திருந்தால் என்னை விசாரணை செய்திருக்க இயலாது என்றும், அவ்வாறு விசாரணை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல, கடந்த 19.12.2021 அன்று நான் குறிப்பிட்ட நேரத்தில் ஆஜர் எதிரிகள் என்னை அவதூறாக பேசவும் இல்லை என்றும் 1வது எதிரி காய்ந்த எண்ணெயை என் மீது ஊற்றவும் இல்லை என்றும், நான் என் தாயார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சமயலறையில் ஏற்பட்ட விபத்து காரணமாக நானே ஊற்றிக்கொண்ட எண்ணெயை வழக்கிற்காக 1ம் எதிரி எண்ணெய் ஊற்றுகிறார் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரி என்னை அவதூறாக பேசவும் இல்லை என்றும், என்னை மகள் என்ற ஸ்தானத்தில் வைத்து 2வது எதிரி பார்த்துள்ளார் என்றால் சரியல்ல. எங்களுக்கு இருக்கிற இடப்பிரச்சினை சரிசெய்வதற்காக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்.M.சாமுண்டீஸ்வரி பிரபா
உதவி அமர்வு நீதிபதி,
மேலூர்